கனியாகுரிச்சி

ஸ்ரீ வடுவழகிப் புகழ்.

எனது காரண ரக்ஷகர்
ரைஸ்மில் இஞ்சினீர்

S. ஸ்ரீரங்கஸ்வாமி துரை
அவர்கள் பாதாரவிந்தம்

இஃது No 32.

அருட்கவி

M. K. P. M. மனோரஞ்சித நாயனார்

இயற்றியதை

...ரீ "பாரதி" அச்சுக்கூடத்தில்
...பிக்கப்பெற்றது.

...1929. [விலை பை 6.

O25:38 .2HKK
N29
176551

உ

ஷண்முகநாதன் துணை.

கதிர்வேலாயுதக்கடவுள் கருணையாலெழுதிய

கனியாகுரிச்சி

ஸ்ரீ வடிவழகிப் புகழ்.

கருணையானந்த ஞானபூபதிகள் திருவாய்மலர்ந்தருளிய

ஆசீர்வாதம்.

கல்வியும் பொருளும் ஷண்முகக் கடவுள்
கருணையுங் கதிதருஞானச்
செல்வமும் அடியார் தங்களைத் துதிக்கும்
சிந்தைமென் மேலுமுண்டாக
வல்வினையாம்பல் விதத்துயர் நீங்க
மகிழ்மனோ ரஞ்சிதந்தனக்கு
நல்வரமளிக்கும் கருணையானந்த
ஞானபூபதி தமிழ்நலமே.

காப்பு வெண்பா.

தங்கமயமானவேல் சரவணையில் வந்தவேல்
மெங்கள் குலதெய்வமாயெழுந்தவேல்—சங்கரர்க்கு
உபதேசம் செய்தவேல் உண்மைபாராட்டிவெகுச்
சபயோகப்பலன் தரும் வேல்துணை.

பழனிமாமலைதனில்வாழும் என்றமெட்டு.

தணியாகுரிச்சியில்வாழும்—கன்னிவடிவழகி
கன்னிவடிவழகி
கருதினேன் பழகி
கண்டாவல் கொண்டுதொழக் கருணைதா அழகி (க)

1 உன்னிதபரம்பொரு ளுலாவும் நற்பதியே
உலகில்யானுள்ளவரை உன்பாதம் கெதியே (க)
2 சென்னியால் தொழுதன்பர் தேடும் நற்துதியே
தேவர்களனுதினம் ஜெயம்பெறும் நதியே (க)
3 மல்லிகை முல்லைமருக் கொழுந்து பூஞ்சோலை
மாதுவடிவழகிவாழும் பொற்சாலை (க)
4 பஞ்சாமிர்தங்களெண்ணை பாலபிஷேகம்
பத்தினிவடிவழகிப் பெரும்யோகம் (க)
5 சாந்துசவ்வாதுபன்னீர் சந்தணப்பொட்டு
தாயாரிடையணியும் சரிகைபொற்பட்டு (க)

6 மஞ்சள்குங்குமமிட்ட வீர்டார்தமுகமே
வணங்கியம்மையிடத்தில் வரம்பெறசுகமே (க)
7 சங்குசேகண்டி அதிர்வெடி மேளவாத்யம்
சதமென்ற அன்பர்களுக் கனுதினம் பாத்யம் (க)
8 மாடப்புருக்க ளன்னம் மயில்குயி லாட்டம்
வையமெலாம்புகழும் மாணிடர்க்கூட்டம் (க)
9 தேவர்குலமுதித்தத் திரு அவதாரி
திங்கள்சடைதரித்தச் சங்கரன்பாரி (க)
10 தேனினுமினியசொல் திகட்டாத நாமம்
தினையளவு கருணைபெற்றிடில் க்ஷேமம் (க)
11 அம்மைவடிவழகி ஆலயம் சுத்தி
ஆவலாய் பணிந்துநல் லருள்பெற முத்தி (க)
12 தண்டாயுதக்கடவுள் தயவால்தன்னாலே
தாசன்மனோரஞ்சிதன் யெழுதினான்மேலே (க)

செந்தமிழுலகினில் என்றமெட்டு.

1 மணிகொழிக்கும் பொன்நகர் கனியாகுரிச்சில்வாழ்
வடிவழகியினருளே பெரும்பொருளே
மனதில் துதித்தோர்க் கருளே
வரமெனக்கருள்தரும் திரிபுரசுந்தரி
நரமெனுமானிட ரானதுரந்தரி
வாக்கிலுதிக்கும் மங்கையே—மனக்கவலை
மாற்றிடும்திருமால் தங்கையே (ம)

2 இனியெனக்குற்றதுணை இவ்வுலகில் வேறுண்டோ
என் துயர் தீர்த்தாளம்மணி ஞானக்கண்மணி
இந்நிலம்புகழும் பெண்மணி
எங்கும்நிறைந்திடும் மங்கையேயென துளம்
தங்கிஉலாவினுல் சங்கரனருள்மிகும்
எப்போதுன் மனதுகளிக்கும்—வரமளிக்கும்
இழிவில்லாதன்மை தெளிக்கும் (ம)

3 பிணிநீக்கவந் தமர்ந்தப்பெற்றவளே யென்தாயே
பிழையறச்செய்வா யம்மையே
மகாநன்மையே பேரின்பஞான உண்மையே
பேதகமாகியப் பாதகம்வேறறச்
சாதகப்பலன்தரும் மாதுசிரோன்மணி
பிரியம்வைத்தென்முன் வருவாய—அருள்தருவாய்
பிரகாசமான திருவாய் (ம)

4 அன்னைவயிற்றிலன்று மூந்நூறுநாள் சுமந்து
அன்பாய்வளர்த்த பாக்கியம் ஆயுள்வரையில்
அமுதூட்டும் ஞானவாக்கியம்
அத்தன்மகிழ்ந்திடும் முத்துகுமாரனை
நத்திவணங்கினல் புத்திவிளங்கிடும்
அன்பர்க்கு அன்பரன்பனே—மனோரஞ்சிதன்
அரனடியார்கள் நண்பனே (ம)

அம்பிகா உன்மகன்குகன் என்றமெட்டு.

அம்பிகா நம்பினேனுனை
ஆதரித்தாள்வ தென்றெனை (அம்)

1 எம்பிரான் மகிழும் அம்மை
எந்தன் துயர்தீர்த்தால் நன்மை
கும்பிட்டேனுன்பாதம் உண்மை
கூறினேன் நேரினில் பாரினில் சீர்பெற (அம்)

2 பிணிநீக்கவந் தமர்ந்தாய்
பெற்றவள்நீயேன் மறந்தாய்
இனியாகிலும் வரந்தா
எண்ணினே னுன்னையே என்னையா ளன்னையே (அம்)

3 தாயேகேள் வடிவழகி
தவித்தேன் வினையில் மூழ்கி
சேயன்வந்தேன் பழகி
செப்பினே னெப்பியே அப்பன்வந் தோப்பவே (அம்)

4 ஆயிரங்கண் ணுடையாள்
ஆதரித்துயென் வினைமீள்
நாயினுங்கடையோன் சொல்கேள்
நத்தினே னென்தாயே சித்தம் இறங்குவாய் (அம்)

5 வெற்றிபெறும் பழனிவாசன்
வேலனடியார்கள் சீஷன்
நற்றமிழுணர்ந்தோர் நேசன்
நவிலு மனோ ரஞ்சித விலாசன்

கும்மி.

1 கும்மியடி பெண்கள் கும்மியடி—மனக்
குறைகள் நீங்கவே கும்மியடி
நம்மையாளும் வடிவழகி பாதத்தை
நாடிக்கும்மி யடியுங்கடி

2 தீராதவல்வினை தீர்ப்பவளாம்—திருத்
தொண்டருளத்தி லமர்ந்தவளாம்
மாராதவைப் பேவல்பில்லி சூனியங்கள்
வாராமல்காக்கும் வடிவழகி

3 அஷ்டதிசைபுகழ் பெற்றவளாம்—நல்
லானந்தவீட்டினுள் ளூற்றவளாம்
துட்சர்குலத்தை யழித்தவளாம் என்
தொல்லையறச்செய்யும் வல்லவியாம்

4 வானோர்புகழ்ந்து வணங்கி அருள்பெறும்—வைய
மெலாம்தொழும் மெய்யுளத்தில்
ஞானஉதயமிகுந்து வளர்ந்திடும்
நற்சுகபாக்கியம் நத்திடுமே

5 மண்ணில் நாம்செய்த வினையொழியும்—வடி
வழகியெனும் நற்பேர்புகல
வெண்ணீரணிய விசேஷ அருள்மிகும்
வேதாந்தவேந்தர் உறவாகும்

6 பாதிமதி யணிந்தாடும்—பரமனைப்
பட்சமாய்மணந்த பத்தினியாள்
சோதிச்சுட ரொளியாகி விளங்கிடும்
சுந்தரிநற்பாதம் காணுங்கடி

7 உள்ளம்களித்திடும் உண்மைமிகுந்திடும்—உத்தமி
சன்னதி நத்தினதால்
கள்ளவினையறும் கைப்பொருள்சேர்ந்திடும்
கண்டாவல் கொள்ளக்கருத்துயரும்

8 கண்ணுக்குகண்கண்ட தெய்வமடி—உயர்
கனியாகுரிச்சி வலைவழுகி
எண்ணுக்கடங்காத அன்பரெல்லாந்தேடி
எற்றிப்பணிவதைப் பாருங்கடி.

9 விரும்பித்துதிக்க வினையகலும்—ஞானம்
மென்மேலுயர்ந்து அருள்பெருகும்
கரும்பின்ருசிபோல் யான்உண்டுகளிக்கவேல்
கடாட்சம் நிறைந்துகவி பொழியும்

10 தேவர்குலத்தி லுதித்தவளாம்—செந்
தேனபிஷேகம் பாலேற்றவளாம்
பாவலர்அன்பில்பூ பூத்தவளாம் என்
பகைஞர்குலத்தை யறுத்தவளாம்

11 சக்கரைதேன் தினைமாபிசைந்து—அதில்
சாலவும் ஆவின்நெய் தீபமிட்டு

அக்கரைநிறைந்த அமிர்தராஜம்பெற்
அன்பாய் துதிப்போம் நாம்வாருங்கடி

12 கோடானகோடி ஜனங்களொன்ருய்—கூடி
கோயில்முன்னின்று கரக்குவித்து
வாடாதமல்லிகைப்பூ சிரம்சாற்றிநல்
வரங்கள்பெறுவதைப் பாருங்கடி

13 காதல்கொண்டன்னை முன்கைதொழுது—உயர்
கற்பூரதீபதூப மமைத்து
பாதகம்வேறறவேணு மென்றன்பர்கள்
பட்சம்வைத்தோதுரார் பாருங்கடி

14 காரணப்பேர்புவி பூண்டவளாம்—ஒரு
கைக்குள்வைத்துலகை ஆண்டவளாம்
பூரணஞான சுரோன்மணியாம் உயர்
பூபதிவாலை மனோன்மணியாம்

15 சேவல்கொடிபிடித்தாடு முருகேசன்
செந்தமிழ்செல்வத் திருவருளால்
ஆவல்கொண்டன்பன் மனோரஞ்சிதன்கவி
அன்னைமேல்பாட அமைந்ததுசீர்

சுபம். சுபம். சுபம்.

அருட்கவி, **M. K. P. M.** மனோரஞ்சித நாயஞர்,
மாங்குடி.

கதிர்வேலாயுதக்கடவுள் கருணையாலெழுதிய

ஆசிரிய விருத்தம்.

வழியறிந் துணராத தாய்தந்தை துணைவரும்
மாமன்மைத் துன ருறவினர்
வரைவதற் குபதேச வாத்தியா ரவருடைய
வாத்தியார்முன் னோர்களும்
தொழில்செய்தால் ஜீவனஞ்செய்யலா மென்றெண்ணி
சொன்னதல்லால் அரனடி
தொழுதா லமுதுண்ணலாம் சுகம்பெற்று வாழ்வோமென
சொல்லுவோ ரில்லாததால்
பழிதேடி கொண்டயோ னலைந்ததை நினைந்திடப்
பதறுதே கதறிமனமும்
பசிதீர உணவூட்டும் ருசியான தெய்வமே
பன்னிருகை வடிவேலனே
செழித்தோங்க செல்வமும் தீர்க்காயுள் ஞானமிக
சேயன்மீ தன்புவைத்து
செய்வினை யகற்றி நல்மெய்வழிக் கருள்தரும்
சிவஷண்முகக் கடவுளே.

சுபம். சுபம். சுபம்.

ஷண்முக விலாசம்
அருட்கவி,
M. K. P. M. மனோரஞ்சித நாயனார்,
மாங்..